# "சமூக வலையத்தளங்கள் முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் ஏற்படுத்திவரும் எதிர்மறையான தாக்கங்கள்: நிந்தவூர் பிரதேசத்தை மையப்படுத்தியதோர் ஆய்வு"


**Supervisor**
*Dr. S. M. M. Nafees*
*Senior Lecturer,*
*Faculty of Islamic studies &*
*Arabic Language*

**Researcher**
*Mr. M. F. Mohamed Imam,*
*Department of Islamic Studies,*
*Faculty of Islamic studies &*
*Arabic Language*



கடந்த சில தசாப்தங்களாக இலங்கையில் சமூகவலையத்தங்களானது பல்வேறு எதிர்மறையான தாக்கங்களை முஸ்லிம் இளைஞர்களுக்கு மத்தியில் ஏற்படுத்தி வருகின்றன. எனவே இத்தகைய இளைஞர்களினுடைய கல்வி, கலாசார, சமூக, சமய, பொருளாதார, உளவியல் போன்றவைகளில் இச்சமூகவலையத்தளங்களானது எத்தகைய எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன என்பதைக் கண்டறிவதே இவ்வாய்வின் ஆய்வுப் பிரச்சினையாக காணப்படுகிறது. இதன் பின்னணியில் இவ்வாய்வானது "சமூகவலையத்தளங்கள் முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் ஏற்படுத்திவரும் எதிர்மறையான தாக்கங்கள் நிந்தவூர் பிரதேசத்தை மையப்படுத்தியதோர் ஆய்வு" எனும் தலைப்பில் நிந்தவூர் பிரதேசத்தில் சமூகவலையத்தளங்களானவை முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் ஏற்படுத்திவரும் எதிர்மறையான தாக்கங்களை அடையாளம் காணல் என்ற பிரதான நோக்கத்தினை அடிப்படையாக வைத்து ஆராய்கிறது.

இது ஒரு பண்புசார் ஆய்வு என்பதால் முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகளானது தரவு சேகரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. கலந்துரையாடல், நேர்காணல், அவதானம், வினாக்கொத்து ஆகிய வழிகளில் முதலாம் நிலைத்தரவுகள் பெறப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. வினாக்கொத்தானது ஆய்வுப் பிரதேசத்தில் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட 100 முஸ்லிம் இளைஞர்களிடத்தில் வழங்கி மேலதிகத் தகவல்கள் பெறப்பட்டுள்ளன. ஆய்வுத் தலைப்புடன் தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள், இணையத்தளங்கள், ஒளி, ஒலி நாடாக்கள், பிரதேச செயலகத்திலிருந்து பெறப்பட்ட தகவல்கள் போன்றனவற்றிலிருந்து இரண்டாம் நிலைத்தரவுகள் பெறப்பட்டுள்ளன. MS-Excel மென்பொருளானது வீதங்கள் கண்டறிவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. கோட்பாட்டு விடயங்களை முன்வைப்பதற்கு இரண்டாம் நிலைத்தரவுகள் அதிகம் பயன்பட்டுள்ளன.

இவ்வாய்வின் மூலமாக நிந்தவூர் பிரதேசத்தில் வாழும் முஸ்லிம் இளைஞர்கள் பேஸ்புக், ட்வீட்டர், யூ டியுப் போன்ற சமூகவலையத்தளங்களை மிகக் கூடுதலான பயன்படுத்தி வருவதோடு, இப்பிரதேசத்தில் சமூகவலையத்தளங்கள் முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் எதிர்மறையான தாக்கங்களை அதிகம் ஏற்படுத்தி வருகின்றன. இருந்தபோதிலும் அத்தகைய எதிர்மறையான தாக்கங்களை அவ்விளைஞர்களின் கல்வி, கலாசார, சமய, உள, சமூக, பொருளாதாரம் போன்றவைகளில் ஏற்படுத்தி வருகின்றன என்பதும் இவ்வாய்வில் கண்டறியப்பட்டது.



***Keywords:*** சமூக வலையத்தளங்கள், இளைஞர்கள், முஸ்லிம் இளைஞர்கள்